# எழுத்து அறிமுகம்
# பாலர் பள்ளி இரண்டாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 9
# ‘நல்லிணக்கம்’

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் எழுதுதலுக்கான ஆயத்தப் பயிற்சியில் ஈடுபடுவார்கள். அவர்கள் ‘ஊ’ எழுத்துத் தொடர்புடைய சொற்களைப் பெரிய புத்தகக் கதையின்வழி அறிந்துகொள்வார்கள். பிறகு, பிள்ளைகள் ‘ஊ’ என்னும் வரிவடிவத்தை எழுதக் கற்றுக்கொள்வார்கள்.

**கற்றல் குறிக்கோள்கள்:**

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**

1. **சிந்தனைகளைப் பிரதிபலித்தல், அடையாளமிடுதல், குறியீடுகளை வரைதல், எழுத்துக்களை எழுதுதல்**

- ✓ கிறுக்கல்கள் செய்யவும் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்கவும் தடித பென்சில்/ வண்ண எழுதுகோலைப் பயன்படுத்துதல்
- ✓ மணலில் வரைதல், விரலில் தடவப்பட்ட வண்ணங்கள் முதலியவைமூலம் எழுத்துப் போன்ற வடிவங்களை உருவாக்குதல்
- ✓ ஓர் எழுத்தின் கோடுகளை முறையாக எழுத முயலுதல்

## ஆயத்த நடவடிக்கை

**எழுத்தை அடையாளம் காணும் விளையாட்டு**

*** பிள்ளைகள் ஏற்கனவே படித்த எழுத்துகளை எழுத்தட்டைகளாகச் செய்து ஒரு பெட்டியில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்.**

1. பிள்ளைகளை அரை வட்டமாக உட்காரச் சொல்லுங்கள்.

2. பிள்ளைகள் ஒவ்வொருவராகப் பெட்டியிலிருந்து ஒரு எழுத்தட்டையை எடுத்து அதிலுள்ள எழுத்தை உரக்க வாசிக்கச் சொல்லுங்கள். பிறகு, அந்த எழுத்தட்டையை மற்றப் பிள்ளைகளிடம் காட்டச் சொல்லுங்கள்.

3. அவர் அந்த எழுத்தைச் சரியாக வாசித்திருந்தால் எழுத்தட்டையை அவர் வைத்துக்கொள்ளலாம். அவர் எழுத்தைத் தவறாக வாசித்திருந்தால் அதை அவர் பெட்டியில் வைத்துவிடச் சொல்லுங்கள்.

## பாட வளர்ச்சி

4. நல்லிணக்கம் என்னும் கதையை வாசிப்பதற்கு முன் இக்கதையில் இடம்பெறும். கீழ்க்காணும் சொற்களைக் கவனமாகக் கேட்க வேண்டும் என்பதைப் பிள்ளைகளிடம் சொல்லுங்கள்.

   - ஊத்தப்பம்
   - ஊற்றினார்
   - ஊதா
   - ஊதி
   - ஊஞ்சல்

5. நல்லிணக்கம் என்னும் கதையை உங்களுடன் இணைந்து வாசிக்கச் சொல்லுங்கள். பிள்ளைகளிடம் இக்கதையில் வரும் கீழ்க்காணும் சொற்களை நினைவுகூர்ந்து பெரிய புத்தகத்தில் சுட்டிக்காட்டச் சொல்லுங்கள்.

| | |
|---|---|
| **ஊத்தப்பம்** | **ஊதா** |
| **ஊற்றினார்** | **ஊதி** |
| **ஊஞ்சல்** | |

** மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைச் சொல்லட்டைகளாகத் தயாரித்துக்கொள்ளுங்கள்.

** ‘ஊ’ என்னும் எழுத்தைக்கொண்ட எழுத்தட்டையைத் தயாரித்துக்கொள்ளுங்கள்.

**ஊ**

6. பிள்ளைகளிடம் சொல்லட்டைகளைக் காட்டி ‘ஊ’ என்னும் எழுத்தை அறிமுகம் செய்யுங்கள். பிறகு, அவற்றை வெண்பலகையில் ஒட்டுங்கள்.

7. எழுத்தட்டையைக் காட்டி ‘ஊ’ என்னும் எழுத்தை உச்சரித்துக் காட்டுங்கள். பிள்ளைகளிடம் உங்களைப் பின்தொடர்ந்து உச்சரிக்கச் சொல்லுங்கள்.

8. வெண்பலகையில் ஒட்டி வைத்த சொல்லட்டைகளை ஒவ்வொன்றாகக் காட்டி அதிலுள்ள ‘ஊ’ என்னும் எழுத்தை அடையாளம் காணச் சொல்லுங்கள்.

9. பிறகு, அந்தச் சொல்லை வாசித்துக் காட்டுங்கள். உங்களைப் பின்தொடர்ந்து பிள்ளைகளையும் வாசிக்கச் சொல்லுங்கள்.

## பாட முடிவு

**தசைநார் இயக்கப் பயிற்சி:**

10. ஆள்காட்டி விரலால் ‘ஊ’ என்னும் எழுத்தின் வடிவத்தை வண்ண மணலில் எழுதிக் காட்டுங்கள். பிள்ளைகளையும் அதேபோல் எழுதிப் பழகச் சொல்லுங்கள்.



11. நடவடிக்கைத் தாளைப் பிள்ளைகளிடம் கொடுத்து வண்ண எழுதுகோலால் ஆள்காட்டி ‘ஊ’ என்னும் எழுத்தின் மேல் வரிவடிவம் கொடாமல் அம்புக்குறிக்கேற்ப எழுதச் சொல்லுங்கள்.





*******************************

# நடவடிக்கை

பெயர்: __________________        தேதி: __________

## வண்ணம் தீட்டுவேன்; சொல்வேன்



## புள்ளிகளை இணைப்பேன்



